P ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY
SIP ACADEMY - KATTANKUDY
SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY

EXAMINATION FOR GRADE FOUR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD BURSARIES

மாணவர்களை பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு பணம் வழங்குவதற்குமாகத் தரம் நான்கு மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2021

வினாத்தாள் - I

28.09.2021 (TUESDAY)

1 மணித்தியாலம்

சுட்டெண் -.....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
- ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
1	
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பிட சரியென உறுதிப்படுத்துகின்றேன்..	V/I/T
மதிப்பீட்டுப்புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T

www.ikeu.lk





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English


76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

- **01, 02 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ள அடைப்புகளினுள்ளே காணப்படும் பொருட்களுள் நெருங்கிய தொடர்பற்ற அடைப்பினைத் தெரிவு செய்க**


01)



(1)



(2)




(3)


02)



(1)




(2)




(3)

03) உரு A ஐ ஒத்த ஓர் உருவைப் பெறுவதற்காக உரு B யில் செய்ய வேண்டிய மாற்றங்களின் எண்ணிக்கை எத்தனை?




A உருவம்




B உருவம்

(1) 02 மாற்றங்கள் (2) 03 மாற்றங்கள் (3) 04 மாற்றங்கள்

04) முதலில் தரப்பட்டுள்ள பூரணமற்ற உருவை சரியாகப் பூர்த்தி செய்வதற்கு இணைக்க வேண்டிய பகுதியைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

05) பின்வரும் தகவல்களைக் கொண்டு அதற்கான சரியான விடையைத் தெரிவு செய்க.

நான் ஆகாயத்தில் பறப்பேன். ஆகாயத்தில் முகில்களுக்கிடையேயும் நான் சில வேளைகளில் பறப்பேன். சிறகுகளை அசைக்காமல் என்னால் பறக்கத்தக்கதாக இருத்தல் புதுமையான விடயமாகும். நான் மரங்களில் தங்கியிருப்பதில்லை. நான் விஷேட இடங்களில் மட்டுமே இறங்குவேன். எனின் நான் யார்?

(1) விமானம் (2) பறவை (3) கப்பல்

www.lkedu.lk

06) 54 தொடக்கம் 59 வரையுள்ள எண்களை எழுதும் போது இலக்கம் 5 எழுதப்படும் தடவைகள் எத்தணை?

(1) 6 (2) 5 (3) 7

07) "தொலைக்காட்சி" என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்களை மாத்திரம் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய சொல் யாது?

(1) தொலைவு (2) காலைக்காட்சி (3) மாலைக்காட்சி

- 08, 09 ஆகிய வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள பாடலைக் கொண்டு சரியாக விடையினைத் தெரிவு செய்க

ஊக்கத்தோடு உழைத்து விடு! – நீ
உயர்வு பெறுவாய்! இது உண்மை!
நோக்கம் யாவும் நிறைவேறும்! – உனை
நோக்கி உலகம் கைகூப்பும்.

08) நாம் உயர்வு பெற என்ன செய்ய வேண்டும் என பாடலில் கூறப்பட்டுள்ளது?

(1) ஊக்கத்தோடு உழைக்க வேண்டும்.
(2) நோக்கம் நிறைவேற உழைக்க வேண்டும்
(3) உலகம் கை கூப்ப உழைக்க வேண்டும்.

09) சத்தியம் என்ற கருத்தினை தரும் சொல்லை பாடலில் இருந்து தெரிவு செய்க.

(1) பொய் (2) நேர்மை (3) உண்மை

10) கந்தனின் தோட்டத்தில் இம்முறை அதிக விளைச்சல் கிடைத்தது, இதற்குரிய காரணமாக இருக்கக் கூடியது,

(1) பயிர்களை சிறந்த முறையில் பராமரித்தமை
(2) கந்தன் அதிக விளைச்சலை எதிர்பார்த்தமை
(3) கந்தனுக்கு உறவினர்கள் உதவி செய்தமை

11) தரப்பட்டுள்ள உருவை நன்கு விளக்கும் சொற்கள் அடங்கிய விடையைத் தெரிவு செய்க



(1) மாளிகை, வெயில், இயற்கை
(2) அடிப்படைத் தேவை, பாதுகாப்பு, வசிப்பிடம்
(3) பிராணி, பாதுகாப்பு, செயற்கை

12) கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் ஆங்கில எழுத்துக்கள் A யிற்கும் B யிற்கும் பொருத்தமான சொற்களை முறையே காட்டும் விடை யாது?

பழங்கள்	A	தானியங்கள்
அன்னாசிப்பழம்	கரட்	குரக்கன்
மாம்பழம்	பாகற்காய்	B


(1) காய்கறிகள், முள்ளங்கி
(2) கீரை வகை, பசளி
(3) காய்கறிகள், பயறு


13) நானும், நீயும், மேரியும், சாந்தனும் என்னுடைய பெற்றோரும் கடற்கரைக்குச் சென்றிருந்தோம். கடற்கரைக்குச் சென்றவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?


(1) 7 (2) 6 (3) 5

www.lkedu.lk

14) ஒருவர் தனது வீட்டில் இருந்து தெற்கு திசை நோக்கி பயணம் செய்து பின்பு கிழக்குப் பக்கமாக பயணித்து பின் வடக்கு நோக்கி பயணம் செய்தார். அவர் பயணம் செய்த திசைகளை காட்டும் படம் எது?

(1) 

(2) 

(3) 

15) அலங்கார சர விளக்கொன்றில் சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள், மின் குமிழ்கள் ஒழுங்கு வரிசையில் உள்ளன இந்த அலங்கார சரத்தில் மொத்தமாக 66 மின் விளக்குகள் உள்ளதாயின் இங்குள்ள மஞ்சள் நிற மின்குமிழ்கள் எத்தனை?

(1) 15 (2) 16 (3) 17

16) வாக்கியங்களை சரியான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விடையினைத் தெரிவு செய்க?

A – பாடசாலை மணி ஒலிக்கிறது
B – காலைப் பிரார்த்தணைக்காக மாணவர்கள் ஒன்று கூடுகின்றனர்
C – பாடங்கள் ஆரம்பமாகிறது
D – காலைப் பிரார்த்தணை ஆரம்பமாகிறது
E – மாணவர்கள் பாடசாலையை நோக்கிச் செல்கின்றனர்

(1) ACBDE (2) CDABE (3) EABDC

17) கீழே அடைப்பினுள் தரப்பட்டுள்ள எண்ணில் உள்ள இலக்கங்களை பின்னாலிருந்து முன்னால் எழுதும் போது கிடைக்கும் விடை யாது?


1047

(1) நான்காயிரத்து நூற்று ஏழு
(2) ஏழாயிரத்து நானூற்று ஒன்று
(3) ஏழாயிரத்து நூற்று நான்கு

18) தீக்குச்சிகளைப் பயன்படுத்தி உரோம இலக்கங்களை உருவாக்கும் செயற்பாட்டில் இலக்கம் 10 ஐ உருவாக்க 02 தீக்குச்சிகள் தேவை. எனின் இலக்கம் 19 இனை உருவாக்க தேவையான தீக்குச்சிகள் எத்தணை?

(1) 3 (2) 4 (3) 5

19) சதுரமுகி தாயக்கட்டை ஒன்றின் மூன்று வேறுபட்ட தோற்றங்கள் கீழே தரப்பட்டுள்ளன.




ஆங்கில எழுத்து F இற்கு எதிர்ப்பக்கத்தில் அமைந்துள்ள ஆங்கில எழுத்து யாது?

(1) F (2) B (3) D

www.lkedu.lk

- தாவரங்களை மாத்திரம் உணவாக உட்கொள்ளும் விலங்குகள், இறைச்சியை மாத்திரம் உணவாகக் கொள்ளும் விலங்குகள், பறக்கும் விலங்குகள் ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்பினைக் காட்டும் வரிப்படம் கீழே தரப்பட்டுள்ளது.



20) c, i ஆகிய எழுத்துக்களினால் வகைகுறிப்பதற்கு ஏதுவாக அமையும் இரு விலங்குகள் முறையே, இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

(1) முயல், பருந்து (2) யானை, வெளவால் (3) நரி, கொக்கு

21) பாடசாலை நண்பர்கள் 6 பேர் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தமக்கிடையே பொங்கல் வாழ்த்தட்டைகளை பறிமாறிக் கொண்டனர் எனின், இந்த நண்பர்களிடையே பறிமாறப்பட்ட வாழ்த்தட்டைகளின் எண்ணிக்கை யாது?

(1) 30 வாழ்த்தட்டைகள் (2) 15 வாழ்த்தட்டைகள் (3) 16 வாழ்த்தட்டைகள்


22) 01 தொடக்கம் 10 வரையுள்ள இரட்டை எண்களை மாத்திரம் கூட்டினால் வரும் விடை யாது?

(1) 55 (2) 25 (3) 30

23) பின்வரும் கணிதக் கோவைகளுள் மிகச் சரியான விடை பெறப்பட்டுள்ள கோவையை தெரிவு செய்க.

(1) 44 + 33 + 22 + 11 = 100
(2) 55 + 65 + 35 + 25 = 180
(3) 38 + 42 + 64 + 76 = 210

- பூனையொன்று எலியை பிடிப்பதற்கான வழியை கீழே உள்ள உருவானது காட்டுகின்றது. இதனைக் கொண்டு கீழே உள்ள வினாவிற்கு விடை தருக.



24) எலியை பிடிப்பதற்கான பாதை வழியே பூனை சென்றதாயின் பூனை வலது பக்கத்திற்கு திரும்பிய தடவைகள் எத்தனை?

(1) 5 தடவைகள் (2) 6 தடவைகள் (3) 4 தடவைகள்

25) ஒரு பண்ணையிலுள்ள ஆடுகளின் கால்களினதும், தலைகளினதும் மொத்த எண்ணிக்கை 108 எனின், பண்ணையிலுள்ள ஆடுகள் எத்தனை?

(1) 34 (2) 35 (3) 36

www.lkedu.lk


26) இலங்கை நாடானது 1948.02.04 அன்று சுதந்திரம் பெற்றது. இலங்கை சுதந்திரம் பெற்ற ஆண்டானது எத்தணையாம் நூற்றாண்டின் எந்த தசாப்தத்திற்குரியது?

(1) 19ம் நூற்றாண்டின் 4ம் தசாப்தம்
(2) 20ம் நூற்றாண்டின் 5ம் தசாப்தம்
(3) 20ம் நூற்றாண்டின் 9ம் தசாப்தம்

27) அடைப்பிற்குள் தரப்பட்டுள்ள கோலங்களை அவதானித்து வெற்றிடங்கள் A,B இற்கு முறையே வரவேண்டிய எண்களை தெரிவு செய்க.


16	B	1	2	3	4
	13		7		5
11		9		9	
5		7	8	12	11
	3		1	A	14

(1) 15,15
(2) 15,14
(3) 13,15

28) 

அருகே உருவில் தரப்பட்டுள்ள திண்மம் அரியமாகும். இத்திண்மத்தின் உச்சிகளினதும் முகங்களினதும் கூட்டுத்தொகையை உரோம எண்ணில் எழுதினால் வரும் விடை யாது?

(1) XI (2) IX (3) XII


29) 

அருகே உள்ள உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியை முழு உருவின் பின்னமாக எழுதினால் வருவது?

(1) $\frac{4}{8}$ (2) $\frac{3}{8}$ (3) $\frac{3}{4}$

30) பின்வரும் இரண்டு திண்மங்கள் தொடர்பாக தரப்பட்டுள்ள கூற்றுக்களுல் சரியான கூற்றினைத் தெரிவு செய்க.





(1) விளிம்புகளின் எண்ணிக்கை உச்சிகளின் எண்ணிக்கையை விட குறைவாகும்.
(2) உச்சிகளின் எண்ணிக்கை முகங்களின் எண்ணிக்கையை விட குறைவாகும்.
(3) முகங்களின் எண்ணிக்கை விளிம்புகளின் எண்ணிக்கையை விட குறைவாகும்.

31) பெட்டி ஒன்றினுள் சிவப்பு நிற பேனாக்கள் ஆறும், நீல நிற பேனாக்கள் ஒன்பதும், கறுப்பு நிற பேனாக்கள் பதினொன்றும், பச்சை நிற பேனாக்கள் ஏழும் உள்ளன. இந்த பெட்டியில் உள்ள சிவப்பு நிறமல்லாத பேனைகள் எத்தணை?

(1) 33 பேனாக்கள் (2) 27 பேனாக்கள் (3) 24 பேனாக்கள்

32) வியாபாரி ஒருவர் சந்தையில் விற்பனை செய்வதற்காக கொண்டு வந்த தேங்காய்களின் எண்ணிக்கை 448 ஆகும். இந்த வியாபாரி தான் கொண்டு வந்த தேங்காய்களில் $\frac{1}{4}$ பகுதி அளவிலான தேங்காய்களை விற்பனை செய்தார் எனின், இந்த வியாபாரி விற்பனை செய்த தேங்காய்களின் எண்ணிக்கை யாது?

(1) 112 தேங்காய்கள் (2) 336 தேங்காய்கள் (3) 224 தேங்காய்கள்

www.lkedu.lk

33) மாதவன் காலையில் பாடசாலைக்குச் செல்லும் போது அவனது நிழலானது அவனுக்கு முன்னால் விழுந்தது. மேலும் அவன் மாலையில் பாடசாலை விட்டு வரும் போது அவனது நிழல் அவனுக்கு முன்னால் விழுந்தது. எனின், மாதவன் காலையில் சென்ற திசையையும் மாலையில் சென்ற திசையையும் முறையே தருவது?


(1) கிழக்கு, மேற்கு (2) மேற்கு, வடக்கு (3) மேற்கு, கிழக்கு

34) கமலாவிடம் 1m 50cm நீளமுள்ள றிபன் நாடா ஒன்று உள்ளது. விமலாவிடம் 3m 25cm நீளமுள்ள றிபன் நாடா ஒன்று உள்ளது. இவர்கள் இருவரிடமும் உள்ள றிபன் நாடாக்களை ஒன்றாக இணைத்தால் வரும் புதிய றிபன் நாடாவின் நீளம் யாது?

(1) 4m 15cm (2) 4m 75 cm (3) 4m 30cm

35) அண்ணா மாம்பழத்தையும் அப்பிள் பழத்தையும் விரும்புகின்ற போதிலும் தோடம் பழத்தை விரும்புவதில்லை. தம்பி தோடம் பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகின்ற போதிலும் அப்பிள் பழத்தை விரும்புவதில்லை. தங்கை கொய்யா பழத்தையும் மாம்பழத்தையும் விரும்புகின்றாள். இவர்கள் மூவரும் விரும்பும் பழம் எது?


(1) அப்பிள் பழம் (2) கொய்யாப்பழம் (3) மாம்பழம்

36) 

அருகே தரப்பட்டுள்ள உருவில் $\frac{1}{2}$ பங்கினை நிழற்றுவதற்கு இந்த உருவில் மேலும் எத்தணை முக்கோணங்களை நிழற்ற வேண்டும்.?


(1) 04 (2) 05 (3) 06

37) ஓர் உணவுப் பொருள் சுற்றப்பட்டுள்ள பொதி தாளில் உள்ள சுட்டுத் துண்டின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. இந்த சுட்டுத் துண்டுக்கு ஏற்ப (1) , (2) ஆகியனவாக இருக்கத்தக்கன முறையே யாவை?



(1) உற்பத்தி செய்த திகதியும், பொதி செய்த திகதியும்
(2) பொதி செய்த திகதியும், காலாவதியாகும் திகதியும்
(3) உற்பத்தி செய்த திகதியும், காலாவதியாகும் திகதியும்


38) கீழே தரப்பட்டுள்ள எண்கோலத்திற்கு ஏற்ப "?" இடப்பட்டுள்ள அடைப்பினுள்ள வர வேண்டிய எண்ணைத் தெரிவு செய்க?



(1) 3 (2) 4 (3) 5

www.ikedu.lk

39) பின்வரும் உருக்களில் உள்ள A,B,C,D எனும் மெழுகுவர்த்திகள் எரியும் நேரத்திற்கேற்ப ஒழுங்குபடுத்தினால் வரும் விடையை தெரிவு செய்க.



(1) CABD (2) DBCA (3) ADBC

40) நோயாளிகள் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான காரணமாக அமைவது

(1) வீட்டில் மருந்து வில்லைகள் இல்லை என்பதால்
(2) வீட்டில் ஓய்வாக இருக்க முடியாது என்பதால்
(3) நோயாளிகளை வைத்தியர்கள் தினமும் பார்வையிட வேண்டும் என்பதால்

***

www.lkedu.lk

SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY
SIP ACADEMY - KATTANKUDY
SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY SIP ACADEMY

EXAMINATION FOR GRADE FOUR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD BURSARIES

மாணவர்களை பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு பணம் வழங்குவதற்குமாகத் தரம் நான்கு மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2021

வினாத்தாள் - II

28.09.2021 (TUESDAY)

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் - .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித் இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உப பகுதிகளும் உள்ளன.
- **எல்லா வினாக்களுக்கும் உரிய விடையை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப் பட்டிருக்கும் போது **சரியான விடையினைத் தெரிவு செய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
1	
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பிட சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப்புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன்.	V/I/T
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T

www.ikedu.lk

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

01. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

நான் குடம்பியாக இருக்கும் போது உடம்பில் மயிர்கள் இருக்கும். உடல் பச்சை நிறத்தில் அல்லுத பழுப்பு நிறத்தில் இருக்கும். மயிர்கொட்டிப் புழு என மனிதர்கள் எல்லோரும் என்னை அழைப்பார்கள். எங்களது மயிர் பட்டால் உடல் அரிப்பெடுப்பதுடன் தோல் தடித்து ஒவ்வாமையும் ஏற்படும். இதனால் மனிதர்கள் எம்மை வெறுப்பார்கள். எம் இனத்தவரை அழிப்பார்கள். நாட்கள் சில சென்ற பின்னர் கூட்டுப்புழுவாக உரு மாறுவேன். அப்போது எனது உடலில் பல மாற்றங்கள் ஏற்படும்.

- **பந்தியை மாத்திரம் துணையாக கொண்டு (1) தொடக்கம் (6) வரை வினாக்களுக்கு விடை தருக.**

(1) என்னை மனிதர்கள் எல்லோரும் எவ்வாறு அழைப்பார்கள்?

.....

(2) நான் நாட்கள் சில சென்ற பின்னர் எவ்வாறு உரு மாறுவேன்?

.....

(3) மனிதன் என்ற சொல்லின் பன்மை வடிவத்தை எழுதுக?

.....

(4) தன்மை ஒருமைச் சொல் ஒன்றை எழுதுக?

.....

(5) குடம்பிப் பருவத்தில் இவற்றின் உடலின் நிறங்கள் யாவை?

.....

(6) நான் குடம்பியாக இருக்கும் போது உடம்பில் காணப்படுவது யாது?

.....

02. உயர்திணைப் பன்மை பெயர்ச் சொல் ஒன்றை தெரிவு செய்க.

அவள் / தேனி / அவை / மாணவர்கள் / பறவை

03. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்கு படுத்தி கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

ஆகும் / கிராமிய / ஒன்று / எட்டுக் கோடு / விளையாட்டுக்களில்

.....

04. பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

தொல் பொருட்கள் எவ்வாறு அழிவடைகின்றன.

05. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலை தொடர்புகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் எதிரேயுள்ள அடைப்புக்களில் அடையாளம் இடுக.

(1) எனது பூந்தோட்டத்தில் அழகான பூக்கள் பூத்துள்ளன. ( )
(2) நாடெங்கும் அடை மழை பெய்தன ( )
(3) தாலாட்டுப் பாடல்கள் அழகானவை ( )
(4) பழம் கீழே விழுந்தன ( )

06. பின்வரும் பழமொழியை பூர்த்தி செய்ய பொருத்தமான சொல்லை கீறிட்ட இடத்தில் எழுதுக.

(1) அடம்பன் ..... திரண்டால் மிடுக்கு
(2) ..... பெரு வெள்ளம்.

07. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக் கூட்டல் உள்ள சொற்களை அடைபினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) நான் புத்தகத்திற்கு ..... (உரை / உறை) போட்டேன்.
(2) ஆசிரியர் என்னை சத்தமான ..... (அளை / அழை) த்தார்.

www.lkedu.lk

08. பின்வரும் வாக்கியத்தை ஒருமை வாக்கியமாக எழுதுக.

புறாக்கள் பறந்து சென்றன.

……

09. பெண்பாற் சொல்லை எழுதுக.

- கணவன் - ……

10. பின்வரும் கூற்றுக்கள் அறிவித்தலா? அறிவுறுத்தலா? கட்டளையா? என்பதை தெரிவு செய்க.

(1) எழுந்து நின்று மேலே துள்ளுங்கள்.
(அறிவித்தல் / அறிவுறுத்தல் / கட்டளை)

(2) தரப்பட்டுள்ள இடைவெளியில் உமது பரீட்சை சுட்டெண்ணை எழுதுக.
(அறிவித்தல் / அறிவுறுத்தல் / கட்டளை)


(3) நாளை பாடசாலையில் மாணவர் மன்றம் நடைபெறும்.
(அறிவித்தல் / அறிவுறுத்தல் / கட்டளை)

11. பின்வரும் ஆங்கில சொற்களின் கருத்தினை தமிழில் எழுதுக.

(1) Moon - …… (2) Face - ……

12. கீழே தரப்பட்டுள்ள உருக்களின் ஆங்கில சொற்களை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

(1)  ……

(2)  ……

13. கீழே தரப்பட்டுள்ள சொற்களை சரியாக ஒழுங்கு படுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(1) Kamal / is / name / my - ……

(2) is / my / this / father - ……

14. "**பகளொவ**" என்ற சொல்லின் தமிழ் கருத்தினை எழுதுக?

……


15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை தமிழில் எழுதுக?

எனக்கு அப்பம் வேண்டும் - ……

16. கீழே தரப்பட்டுள்ள எண்ணை சொற்களில் எழுதுக.

3401 - ……..

17. வட்டத்தினுள் உள்ள இலக்கங்களை பயன்படுத்தி அமைக்கத்தக்க மிகப்பெரிய எண்ணை எழுதுக?




……

www.lkedu.lk

18. தரப்பட்டுள்ள உரோம எண்ணிற்கு அடுத்து வரும் உரோம எண்ணை எழுதுக.

(1) Viii - ……..


(2) 

அருகில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையை உரோம எண்களில் தருக?

……..

19. தரப்பட்டுள்ள எண் கோலங்களின் அடுத்து வரும் எண்ணை எழுதுக?

(1) 9 , 12 , 15 , 18, …….. (2) 8 , 17 , 26 , 35, ……..

20. 

(1) இங்கு தரப்பட்டுள்ள திண்மத்தின் பெயர் என்ன?

……

(2) இத் திண்மத்தில் காணப்படும் உச்சிகளின் எண்ணிக்கை யாது?


……

21. 262 , 821 எனும் எண்களை நான்கினால் வகுக்கும் போது மீதியாக 2 இருக்கும் எண் யாது?

……..

22. 12 பென்சில்களில் இருந்து $\frac{3}{4}$ ஐ விற்ற பின்னர் எஞ்சியிருக்கும் பென்சில்களின் எண்ணிக்கை யாது?

……

23. 

(1) அருகே தரப்பட்டுள்ள உருவில் நிழற்றிய பகுதியை பின்னமாக எழுதுக?

……..

(2) உருவில் நிழற்றாத பகுதியை பின்னமாக எழுதுக?

……

24. மூன்று பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது

பாடசாலை	**மாணவர் எண்ணிக்கை**
பாரதி வித்தியாலயம்	1271
சாஹிரா வித்தியாலயம்	1532
தர்மபால வித்தியாலயம்	2462

(1) பாரதி வித்தியாலயம், சாஹிரா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளிலும் கல்வி கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

……

(2) சாஹிரா வித்தியாலயத்தை விட தர்மபால வித்தியாலயத்தில் எத்தணை மாணவர்கள் கூடுதலாக கல்வி கற்கின்றனர்?


……

25. பின்வரும் தள வடிவங்களைக் கொண்டு ஆக்கப்படும் திண்ம உருக்கள் இரண்டினதும் பெயர்களை எழுதுக.



(1) …… (2) ……

www.ikeou.lk


26. 

இங்கு காட்டப்பட்டுள்ள படத்திற்கேற்ப C என்பவர் B என்பவருக்கு எத்திசையில் நிற்கின்றார்?

……..

27. ஒரு மண்டபத்தின் நீளம் 12m 25cm உம் அகலம் 8m 50cm உம் ஆகும். மண்டபத்தின் நீளம், அகலம் என்பவற்றிற்கு இடையிலான வித்தியாசம் யாது?

……m……cm


28. 

அருகே காட்டப்பட்டுள்ள உருவில் திட்டத்தினைக் குறிக்கும் ஆங்கில எழுத்தையும் பக்கத் தோற்றத்தினை குறிக்கும் ஆங்கில எழுத்தையும் எழுதுக.

திட்டம் - …… பக்கத்தோற்றம் - ……..…..

29. ஒரு பிள்ளை பாடசாலை மைதானத்தில் புள்ளி A யில் இருந்து ஆரம்பித்து 20m தூரம் கிழக்கு நோக்கியும் அவ்விடத்தில் இருந்து 30m தெற்கு நோக்கியும், அவ்விடத்தில் இருந்து 40m மேற்கு நோக்கியும் சென்று புள்ளி B யிற்கு வருகின்றது. புள்ளி B ஐயும் பிள்ளை சென்ற பாதையையும் பின்வரும் சதுரக் கோட்டுப்படத்தில் குறிக்க.

(ஒவ்வொரு சிறிய சதுரத்தின் ஒவ்வொரு பக்கமும் 10m தூரத்தை குறிக்கிறது என கொள்க)



- **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையான வினாக்களுக்கு சரியான விடையினை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) முருங்கை, வேம்பு ஆகிய தாவரங்கள் பூக்கும் மாதம்.

(1) மாசி (2) சித்திரை (3) வைகாசி

31) இலங்கையில் உள்ள அனைத்து மக்களும் இணைந்து கொண்டாடுவது.

(1) தைப்பொங்கல் (2) சுதந்திர தினம் (3) வெசாக்

32) எனது உள்ளத்தின் அமைதியை எனது நண்பர்களும் உணரட்டும். எனது வீட்டாரும் உணரட்டும். எனது பாடசாலையினரும் உணரட்டும். என்பது தியானச் செயற்பாட்டின் எந்த படிநிலைக்குரியது?

(1) பிரார்த்தனை (2) மலர்வு (3) மனவுறுதி

33) இரையை கண்டறிவதற்கு, மீசை காணப்படுவதும், நீந்துவதற்கு செட்டைகள் காணப்படும் பிராணிகள் முறையே

(1) பறவைகள், ஓணான் (2) பூனை, மீன் (3) மீன், பல்லி

34) அரச இலட்சினையில் நெற்கதிரினாலும், நிறைகுடத்தினாலும் குறிக்கப்படுவன முறையே யாவை?

(1) தன்னிறைவும் செழிப்பும், சௌபாக்கியம்
(2) தன்னிறைவும் செழிப்பும், தார்மீகமும்
(3) நிலைத்திருப்பும், நாடும் கட்டுப்பாடான மக்களும்

www.ikeau.lk

35) கொல்லன் கம்மாலையில் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் தொகுதி எது?

(1) நுகத்தடி, இடுக்கி, பட்டறைக்கல், இரும்புவாள்
(2) துருத்தி, பட்டறைக்கல், இடுக்கி, இரும்புவாள்
(3) அத்தாங்கு, துறப்பணம், தட்டுப்பொல், மர வாள்

36) பூச்சி இனங்களுக்கு எத்தனை கால்கள் காணப்படும்.

(1) ஆறு (2) எட்டு (3) ஐந்து

37) தனிப்பட்ட ரீதியில் ஒருவர் பயன்படுத்தாத பொருள் எது?

(1) முகக்கவசம் (2) பற்தூரிகை (3) குடை

38) வாசணை மிக்க பூவகை எது?

(1) போகன்விலா (2) அந்தூரியம் (3) பவளமல்லிகை


39) உலர்த்தி அவிப்பதன் மூலம் ஒளடதப்பானம் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பூ எது?

(1) கோப்பி (2) பொன்னாவரசு (3) கொத்தமல்லி

40) கொலரா, சீதபேதி, கழிச்சல் நோய், நெருப்புக் காய்ச்சல் போன்ற நோய்கள் ஏற்பட காரணமாக அமையும் செயற்பாடு எது?

(1) அசுத்தமான நீர் உடலில் படுவதால்
(2) அசுத்தமான நீர் மற்றும் உணவை உட்கொள்வதால்
(3) நோய்க்காவியான ஈக்கள் மூலம்

41) செங்கற்களை கொண்டு கட்டப்படும் சுவரின் நிலைக்குத்துத் தன்மையை பரிசீலிக்க பயன்படும் உபகரணம் எது?

(1) 

(2) 

(3) 

42) மாப்பொருள் அடங்கியுள்ள உணவுத்தொகுதி பின்வருவனவற்றுள் எது?

(1) சோயா, பருப்பு, பயறு
(2) பாண், பலா வித்து, ஈரப்பலக்காய்
(3) நிலக்கடலை, கௌபி, பழங்கள்

43) தபாலகமொன்றின் மூலம் பெற முடியாத சேவையொன்றாக காணப்படுவது எது?

(1) நன்னடத்தை சான்றிதழ் வழங்குதல்.
(2) மின்சாரக் கட்டணம் செலுத்துதல்.
(3) காசுக்கட்டளைகளைமாற்றுதல்.

44) பின்வரும் விலங்குகளில் முலையூட்டி வகையைச் சேர்ந்த பிராணி எது?

(1) எலி (2) உடும்பு (3) முதலை

www.lkedu.lk

45) இனிப்பான உணவுகளை அதிகம் உண்பதால் அதிகம் ஏற்படக்கூடிய நோய் எது?

(1) நீரிழிவு (2) இரப்பையழற்சி (3) இருதய நோய்

46) நீர் பயணஞ் செய்யும் பாதையில் நீர்க்குழாயில் வெடிப்பு ஏற்பட்டு நீர் விரயமாகிக் கொண்டிருந்தது. இச் சந்தர்பத்தில் நீங்கள் உடனடியாக செய்யக் கூடியது,

(1) நண்பர்களுடன் நீரில் குதித்து விளையாடுதல்
(2) நீர்க்குழாயில் ஏற்பட்ட வெடிப்பை பெரிதாக்கல
(3) பெரியோர்களின் உதவியுடன் நீர் வழங்கல் சபைக்கு அறிவித்தல்

47) **அனைத்துமுண்ணி விலங்குகள்** என குறிப்பிடப்படுபவை.

(1) தாவர வகைகையை மாத்திரம் உணவாக கொள்ளும் விலங்குகள்.
(2) மாமிச மாத்திரம் உணவாக கொள்ளும் விலங்குகள்
(3) மாமிசம் மற்றும் தாவர உணவுகளை உட்கொள்ளும் விலங்குகள்

48) உணவு உண்ணும் போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களில் ஒன்றாக அமைவது

(1) உணவை விழுங்குவதற்கு முன் அதனை போதிய அளவு மெல்லுதல்
(2) உணவை உண்ணும் போது மற்றவர்களுடன் சிரித்துப் பேசுதல்
(3) உணவாக உட்கொள்ளாத பச்சை மிளகாய், கொறுக்காய் போன்றவற்றை தரையில் அல்லது போடுதல்

49) சிலந்தி, வண்ணத்துப் பூச்சி, இறால் ஆகிய பிராணிகளின் கால்களின் எண்ணிக்கையை குறிப்பது.

(1) ஆறு, எட்டு, பத்து
(2) எட்டு, ஆறு, பத்து
(3) பத்து, ஆறு, பண்ணிரண்டு

50) **நல்வாழ்வு** என்பதன் மிகச்சரியான கருத்து.

(1) வாழ்வதற்கான நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றல்.
(2) வீட்டிற்கு மாத்திரம் நல்லவர்களாக செயற்படல்.
(3) நாட்டிற்கு மாத்திரம் நல்லவர்களாக செயற்படல்.

51)  அருகில் தரப்பட்டுள்ள உருவினால் காட்டப்படும் இலங்கையின் தத்துவஞானி யார்?

(1) ஆதர் சீ. கிளார்க்
(2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
(3) ஆனந்த சமரகோன்

52) ஒருவர் தனது வதிவினை உறுதிப்படுத்தும் சான்றிதழை பெறச் செல்ல வேண்டியது?

(1) பிரதேச செயலாளரிடம்
(2) சமுர்த்தி அலுவலரிடம்
(3) கிராம சேவை உத்தியோகத்தரிடம்

53) ஈக்கள் மொய்த்த உணவுகளை உண்பதால் ஏற்படத்தக்க நோய்?


(1) நீர்வெறுப்பு (2) கழிச்சல் (3) மலேரியா

www.lkedu.lk


54) உடலிற்கு சக்தியை தரும் உணவு

(1) வல்லாரை (2) இறைச்சி (3) உருளைக்கிழங்கு


55) பருந்தின் தலைப்பகுதி காட்டப்பட்டுள்ள உருவைத் தெரிவு செய்க,



(1)



(2)



(3)

56) வண்ணத்துப்பூச்சியின் முட்டையில் இருந்து வெளிவரும் மயிர்க் கொட்டிப் புழுக்களின் உணவாக அமையாதது.

(1) தாவரத்தின் காய்கள்
(2) தாவரத்தின் இலைகள்
(3) வண்ணத்துப்பூச்சியின் எஞ்சிய முட்டைகள்

57) கொரோனா (COVID–19) தொற்றுக்கு ஆளாகக் கூடிய ஒரு சந்தர்ப்பமாக அமைவது.

(1) கைகளை அடிக்கடி கழுவி சுத்தத்தை பேணல்.
(2) சமூக இடைவெளியை பேணல்.
(3) நண்பர்களை சந்திக்கும் போது கை குளுக்கிக் கொள்ளுதல்.

58) சமயத்தலத்தையும் அதனுடன் தொடர்புடைய பண்டிகையையும் சரியாகக் காட்டும் விடை யாது?

(1) தேவாலயம் - பெரிய வெள்ளி
(2) கோவில் - எசல பெரஹரா
(3) மஸ்ஜித் - நவராத்திரி

59) இலங்கையின் தேசிய இலட்சினையில் தாமரை மலரிதழ் வட்டத்திற்கு நடுவே அமைந்துள்ள வடிவம்

(1) சூரியன், சந்திரன் (2) நெற்கதிர் (3) வாளேந்திய சிங்கம்

60) **" தினமும் மாலை நேரங்களில் நான் விரும்பி விளையாடும் விளையாட்டு"** என்பதை தலைப்பாக கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும், எழுத்துக் கூட்டல்களும் சரியாக இருத்தல் வேண்டும்)

(1) .....
.....

(2) .....
.....

(3) .....
.....

www.lkedu.lk